பிற்பகல் 4–35

8. மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1991–92, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *1991–92 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு, மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர்.*

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"1991–92 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் அடங்கிய 28–7–2004 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே கோரப்பட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1991–92 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்காக அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன.

நிறைவேற்றப்பெற்ற 1991–92 ஆம் ஆண்டிற்கான மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகள்

கோரிக்கை	(ரூபாய்)
அ. வருவாய்க் கணக்கில் செலவு	
5 முத்திரைத் தாள்கள்—நிருவாகம்	5,97,743
10 பால் வழங்கு திட்டங்கள்	13,63,999
11 மாவட்ட நிருவாகம்	1,57,80,744
17 கல்வி	76,80,21,135
19 பொதுச் சுகாதாரம்	3,43,10,021
20 வேளாண்மை	64,95,05,570
35 நுகர்பொருள் வழங்கல்	10,28,00,583
37 பொதுப் பணிகள்—கட்டடங்கள்	1,37,49,679
39 சாலைகளும் பாலங்களும்	4,70,52,570
44 எழுதுபொருள்—அச்சுத் துறை	4,78,582
46 இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	31,01,895
48 ஊரகத் தொழில்கள்	33,75,985
50 நகராட்சி நிருவாகம்	23,836
மொத்தம்—அ. வருவாய்க் கணக்கில் செலவு	**164,01,62,342**
ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	
57 சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	3,06,32,146
58 சாலைப் போக்குவரத்துப் பணிகள்—கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு	39,22,690
மொத்தம்—ஆ. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	**3,45,54,836**
பெரு மொத்தம்	**167,47,17,178**